Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.137/2025 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW4 ( LW4 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | வளர்மதி | Village | KM பட்டி |
| Father/ Husband Name | ராஜேந்திரன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 55/2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 01.15 **PM**

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார். அ.சா.1 எனது மகள்.அ.சா.2 எனது மருமகன், அ.சா.3 எனது பேரன். நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு எனது வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம என பார்ப்பதற்கு நான் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.10.2024ம் தேதி மாலை 06.30 மணிக்கு நாங்கள், எனது வீட்டில் இருந்த போது, அங்கு வந்த ஆஜர் எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, 2-வது எதிரி அ.சா.1ஐ, கட்டையால் அடித்து அவரது உச்சந்தலையில் காயத்தை ஏற்படுத்தி பெண் வன்கொடுமை செய்தார், தடுக்க வந்த அ.சா.2 ஐ, 1, 3 எதிரிகள் கட்டையால் அவரது தலையில் வலது பக்கம், நெற்றியின் இடது பக்கம் அடித்து காயத்தை ஏற்படுத்தி, விலக்க வந்த சீனுவை 1, 3 எதிரிகள் கட்டையால் தலையின் பின்புறம் காயத்தை ஏற்படுத்தி, 4-வது எதிரி என்னை கட்டையால் வலது முன்னங்கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.137/2025 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW9 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. விஜயராமன் | Village | கம்பம் தெற்கு |
| Father/ Husband Name | வெங்கடாசலம் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 59 /2026 | Calling | சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 12.55 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி பிஎன்எஸ்எஸ் பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

நான் தற்போது கம்பம் தெற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து மற்றும் வழக்கின் மேல் விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த சாா்பு ஆய்வாளர் தீபக் அவர்கள் பணிமாறுதாலகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் எனக்கு பரீட்சியம் ஆகும் என்பதாலும் ஆவணங்களை பாா்த்து என்னால் சாட்சியம் அளிக்க இயலும். 11.10.2024 ம் தேதி 20.00 மணிக்கு சாா்பு ஆய்வாளர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது கம்பம் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த குமரேசன் மனைவி பிரியா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப எதிரிகள் மீது பிரிவு 296(பி), 118(1), 351(3) BNS & 4 of TNPWH Act கீழ் குற்ற எண் 213/24 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், பின்னர் மறுநாள் 12.10.2024 காலை 07.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று பாா்வையிட்டு சாட்சிகள் சஞ்சய், பிரதாப் ஆகியோர் முன்னிலையில் பாா்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் தனிதனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை என தெரியவந்ததால் வழக்கின் 1, 3-வது எதிரிகளை 12.10.2024 லிலும், 2,4 வது எதிரிகளை 30.10.2024 லிலும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். பின்னர் வழக்கில் காயம்பட்ட அ.சா.1,2,3 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் விமல் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றுகள் பெற்றார். வழக்கு விசாரணை முடித்து சாா்பு ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த பிரிவு படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். புகார் **அ.சா.ஆ.2**, முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, பாா்வை மகஜர் **அ.சா.ஆ.4**, வரைபடம் **அ.சா.ஆ.5**, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே **அ.சா.ஆ. 6, 7, 8, 9** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த சந்தேகத்தின் பேரிலான புகாரினை சரியாக விசாரணை செய்யாமல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.